ISSN 2320-589X

# செம்புலம்

பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

விருட்சம் : 3 நவம்பர் : 2015 விழுது : 12

## CHEMPULAM

உரூ. 30/-

*An International Tamil Research Quarterly Journal*



ஆசிரியர்

**செம்மூதாய் சதாசிவம்**

# உள்ளுறை


சிறுபத்திரிகை மரபும் புதுக்கவிதைக் குறித்த மனப்போக்கும் — 04
ச. அன்பு

கம்பராமாயணத்தில் திணை மயக்கம் — 08
சா. சுதா

ஐங்குறுநூற்று உள்ளுறை, இறைச்சி பாடல்களில் முன்னம் — 10
மா. திருமுருகன்

கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் வணிக அறம் — 13
ந. மகாதேவி

பழந்தமிழகத்தில் காணலாகும் இறப்பு மற்றும் ஈமம் சார்ந்த நம்பிக்கைகள் — 16
த. தினேஷ்

நான்மணிக்கடிகை உணர்த்தும் கற்றோர் மேன்மை — 20
ஆ. சுரேஷ்

வேலூர் ம. நாராயணன் கவிதைகளில் தமிழினச் சிந்தனைகள் — 23
வெ. ரா. மீனாட்சி

கவிஞர் மேத்தாவின் புதுக்கவிதைப் போராட்டம் — 26
சு. தீபா

குடும்ப விளக்கில் உணவுப் பழக்கம் — 30
முனைவர் ஜோ. அருணாதேவி

சேனாவரையர் உரைத்திறன் — 34
கோ. சுந்தராம்பாள்

திருக்கோயில் வழிபாட்டு முறைகள் — 38
ப. பிரியா

சித்தர்கள் காட்டும் நெறி முறைகள் — 40
ப. சுபத்திரா

அற இலக்கியங்களில் - மழலையின் மகிமை — 44
முனைவர் க. முத்தழகி

எழுச்சிக் கவிஞர் 'சினேகன்' பன்முகப் பார்வை — 47
முனைவர் மோ. கிறிஸ்டி

அற இலக்கியங்களில் கள்ளுண்ணாமை — 50
முனைவர் மு. புஷ்பரெஜினா

கீழ்க்கணக்கு அற நூல்களில் காணலாகும் ஒழுக்கத்தின் மேன்மை — 53
ப. கதிரவன்

திருக்குறள் நாலடியார் கூறும் அறமே செல்வம் — 56
ப. தமிழ்க்கனி

கலைஞர் கவிதைகளில் புரட்சிகள் — 59
பு. வழியரசன்

நாமக்கல் கவிஞரின் மொழித்திறன் — 61
ஏ. இராஜேஷ்

மதுரைக் காஞ்சி காட்டும் சமூகம் — 64
பா. சிவரஞ்சனி

மலரும் மஞ்சமும் - ஒரு திறனாய்வு [உயிர்ச்சக்தி + ஊட்டச்சக்தி + ஊக்கச்சக்தி = காதல்] — 68
முனைவர் க.மாரியப்பன்

செம்மொழிகளுள் தமிழ் [தாய்] — 72
இரா. அருணா

பேரூர்ப் புராணத்தில் அணிகள் — 75
கு. சிரஞ்சீவி

மணிமேகலை காட்டும் ஐவகைச் சீலம் — 78
முனைவர் கா.மீரா

ஆண்டாள் பிரியதர்ஷினியின் புனைக் கதைகளில் மனிதநேயம் — 81
க. புஷ்பலதா

திருவள்ளுவரின் பார்வையில் மழலைச் செல்வம் — 84
சி.அழகேசன்

# புற இலக்கியங்களில் - மழலையின் மகிமை




**முனைவர் க. முத்தழகி**

உதவிப் பேராசிரியர்,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்


உலக நாகரிகங்கள் தொடக்க நிலையில் இருந்த காலத்தில் தனக்கென தனியொரு நாகரிகத்தையும், பண்பாட்டையும் கொண்டு செம்மையாக விளங்கிய நாடு தமிழ்நாடு. சேர, சோழ, பாண்டியர் மூவேந்தர்களால் ஆட்சி செய்யப்பட்ட நாடு. தமிழ் மீது ஆறாக் காதல் கொண்ட பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்து தமிழை வளர்த்தனர். பாண்டியர்களின் ஆட்சி தமிழகத்தின் எல்லையாகக் கூறப்பட்ட கன்னியாகுமரியின் தெற்கு வரை பரவி இருந்தது என்பதையும் அறிய முடிகிறது.

**"கல்தோன்றா மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி"** தமிழக்குடி என்பர். இத்தகைய முதன்மையான தமிழ்மொழிச் செழுமையான இலக்கண இலக்கிய வளம் நிறைந்த மொழியாகச் சங்க காலத்திலே வளர்ச்சியடைந்துள்ளது. உலக நாடுகள் நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்த காலத்திலே தமிழ் மக்கள் உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

தமிழ் மீது பற்றுக் கொண்ட பாண்டியர்கள் முச்சங்கம் வைத்து தமிழை வளர்த்தனர். அவற்றுள் முதல் இரண்டுச் சங்கங்கள் கடல்கோளால் அழிந்து விட்டன. மூன்றாவது சங்கம் இருந்ததாகக் கருதப்படுவது இப்பொழுது இருக்கும் மதுரையே ஆகும். இன்றைக்குக் கிடைக்கும் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் மூன்றாம் சங்கத்தில் அரங்கேற்றப் பட்டவையாகும்.

சங்க இலக்கியங்களின் தொகுப்பினை எட்டுதொகை, பத்துப்பாட்டு என்பர். சங்கத் தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் எனும் இரு பாகுபாட்டில் அமைந்தவை. பண்டைத் தமிழர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்ணெனப் போற்றினர். காதல் வாழ்வை அகம் என்றும், சமூக வாழ்வு மற்றும் போர் வாழ்வை புறம் என்றும் உரைப்பர். பிறரிடம் பகிர்ந்து கொள்ளக் கூடியதும், சமூக ஒழுகலாறுகள் கொண்ட நிகழ்வுகள் அனைத்தும் புறம் எனப்படும்.

## எட்டுத்தொகையும் பாடு பொருள்களும்

எட்டுத்தொகை தனித்தனி பாக்களின் தொகுப்பாக அமைந்தவை. குறைந்த அடிஅளவான மூன்றடி முதல் நாற்பது அடி வரையிலான பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. பதிற்றுப் பத்து, புறநானூறு புறநூல்களாகவும், பரிபாடல் அகம் புறம் கலந்த நூலாகவும் உள்ளது. இத்தகைய சிறப்புடைய சங்கப் புற இலக்கியங்களில் மழலைச்

செல்வங்களின் இனிமையான மழலை மொழி பற்றியும், மழலையினால் ஏற்படும் மகிழ்ச்சியினைப் பற்றியும், அவர்களால் குடும்பத்தில் ஏற்படக்கூடிய சிறப்பினைப் பற்றியும் ஆராய்ந்து அறியப்படுகிறது.

சிறுபாணாற்றுப்படைப் நூலில் பாணர்கள் மன்னர்களை புகழ்ந்து, பாடி பரிசல் பெறுவர். அவ்வாறு பெறக்கூடிய பரிசைவிட சிறப்புடையதாம் பெற்றெடுத்த மழலைச் செல்வம் என்கின்றனர். இதனையே,

**" பாண்டியனின் கொற்கை நகர்வளம்"** என்பதில்,

**" தோள்கள்புறம் மறைக்கும் நல்கூர் நுசும்பின்**

**ஊளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற**

**கிளர் புண் புதல் வரொடு கிலுகிலி ஆடும்**

**தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்**

**தென்புலங் காவலர் மருமான் ஒன்னார்"**

*(சிறுபாண், 50-677)*

பகைவர்களின் நிலங்களைப் போர்ச் செய்து தனதாக்கிக் கொண்டவனும், முத்துக்கள் அணிவிக்கப்பட்ட வெண் கொற்றக் குடையினை உடையவனும், மாலை அணிந்திருக்கக் கூடியவனுமாகிய பாண்டியன் நெடுஞ்செழியனிடம் இருந்து பெறக்கூடிய பெரும் செல்வத்தை விட தான் பெற்ற மழலைச் செல்வமே பெரிதாகும் என ஒரு தாய் தான் பெற்ற மழலையின் சிறப்பினை எடுத்து இயம்புகிறாள்.

இம்மையில் புகழும், மறுமையில் பேரின்பமும் பயக்கும் பெறலரும் பேறாதலின் மக்கட் பேற்றினை, "நல்வளம்" என்றும், "இளந்துணைப் புதல்வர் நல்வள" என்றும் கூறுவர்.

**" சிறுவர் பயந்த செம்மலோர் "** *(அகம்.66)*

குழந்தையை ஈன்ற மகளிரை சிறப்புப் படுத்தியமை அகநானூற்று பாடல் உணர்த்துகிறது. குழந்தையைப் பெற்றுத் தருவதனால் தன் தலைவனுக்குச் சிறப்பு செய்ததாகும். மேலும், தன் இல்லறச் சிறப்பினை வெளிப்படுத்துவதாகும். இதனையே பதிற்றுப்பத்தில்,

**" புதல்வர் நல்வளம் பயந்த வளம் கெழு**

**குடைச்சூழ் அடங்கி கொள்மை ஆன்ற**

**அறிவின் தோன்றிய நல்இசை ஒன்னுதல்**

**மகளிர் துணித்த கண்ணினும்**

**இரவலர் புண்க ணஞ்சும்"** *(பதிற்றுபத்து, 10:1)*

மழலைச் செல்வமே சிறந்தச் செல்வம் என்பதனையும், இல்லறத்தின் இனிமை மழலைச் செல்வம் என்பதனையும் மேற்கண்ட பாடல் சுட்டுகின்றது. இதனையே சிலம்பில் "பத்திக் கேவணப் பசும் பொற் குடைச் சூழ் சித்திரச் சிலம்பு" சூழ் கொள்ளப்பட்டமையை உணர்த்துகிறது.

ஆண்மை என்பது என்னவென்றால் நல்ல புதல்வனாக செயல்படுவதும் தாய் தந்தையை முதுமையில் பாதுகாப்பதுவுமே என்பதை புறப்பாடல் ஒன்றுரைக்கிறது.

**" முதியோர் முதுமை யெய்து முன் நாடு காத்தற்கு**

**அறிவு வேண்டிய வழி அறிவு உதவியும்**

**வாள் வேண்டு வழி வாளுதவியும்"** *(புறம்.179)*

இளமைப் பருவத்தில் வீரனாகவும், முதுமைக் காலத்தில் தன்னை ஈன்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை சிறப்பு என்கிறது. இன்றைய வாழ்வியலில் இருமனம் இணையும் திருமண விழாவின்பொழுது மணமக்கள் வயதில் பெரியவர்கள் காலில் விழுந்து வணங்குவர். அப்பொழுது பெரியவர்கள் நிறைய மக்களைப் பெற்றுத்தாருங்கள் என்றும், அவர்கள் கையால் தண்ணீர் அருந்தினால் எங்கள் உயிர் சாந்தி பெறும் என்றும் அவர்கள் வாழ்த்துவதை வலியுறுத்துகிறது பின்வரும் பாடல். இதனை,

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**

**ஆள் அன்று என்று வாளின் தப்பார்"** *(புறம்.74:1-2)*

என்றப் பாடல் வரிகள் உணர்த்துகிறது. தான் பெற்றப் பிள்ளையை சிறந்தவனாக்கச் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி கூறுகையில்,

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**

**முந்தியிருப்பச் செயல்"** *(குறள்.67)*

என்பதில் தந்தையின் கடமையினை திருவள்ளுவர் கூறியுள்ளார். இதனை புறநானூற்றில் ஒரு தாய் மழலைச் செல்வத்தை பெற்றுத் தருவதே தன்னுடைய கடமையென்றும், அதனைச் செம்மையுற வடிவமைக்க வேண்டியது யாருடைய கடமை யென்பதையும் முன்வைக்கிறார். அவை,

" ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறம் . 312)

என்பதனை பொன்முடியார், தந்தையின் கடமை, தன் மழலையை சான்றோனாக்குவது, மன்னனின் கடமை சிறந்த வீரனாக்குவது என்பதனையும்,

வீரவேலினை வடித்துத் தர வேண்டியது கொல்லனுடைய கடமை என்பதனையும், தன்னுடைய மழலைக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டியவர்கள் என ஒரு தாய் கூறுவதாக இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. மழலைச் செல்வங்களைப் பெற்றவர்களின் வாழ்க்கை இனிமையாக இருக்கும். இதனால், முதுமை யென்பது இல்லை என்கிறார்கள். இதனை புறப்பாடல் ஒன்று உணர்த்துவதாவது,

"யாண்டுபல ஆக நரை இல ஆகுதல்
யாங்குஆ கியர் ? என வினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்
யான் கண்ட னையார் என் இளையரும் "

(புறம் .191)

நல்ல மனைவி, மக்களைப் பெற்றவர்களுக்கு முடி நரைக்காது என்கிறார் பிசிராந்தையார். கரிகால் சோழன் தாயின் கருவறையில் இருந்த பொழுதே அரசபதவி ஏற்றான் என்றும், இளமையிலேயே சிறந்த படைவீரனாகவும் திகழ்ந்தான் என்றும் அறியப்படுகிறது.

ஔவையார் - அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றிக் கூறுகையில் போருக்குச் சென்றிருந்த மன்னன் தனக்கு மழலைச் செல்வம் ஈன்ற செய்தியறிந்தவன் போர்க் களத்தில் இருந்து விரைவாக தன் மழலையைக் காணவந்தான் என்பதைக் கவிஞர், போர்ப் புரியும் பொழுது சினம் கொண்டமையால் சிவந்த கண்களின் சினம் குறையும் முன்பே தன் மழலைச் செல்வத்தைக் காண வந்தான் என்பதை உணர்த்தியுள்ளார்.

ஒரு தாய் தன் மகன் போர்க்களத்தில் வெற்றிக் கொண்டமையை பற்றிப் பாடுவதாக பூங்கண் உத்திரையார் பாடியதாவது,

"வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே" (புறம் . 277:1-4)

என்கிறார். இதில் ஒரு தாய் தன்மகன் போர்க் களத்தில் வெற்றிபெற்றமைக்கு, தான் பெற்றெடுத்த பொழுதினைவிட பெரு மகிழ்ச்சியடைந்ததாகக் கூறுகிறாள்.

இது போன்றே தன் மகன் போர்க் களத்தில் புறமுதுகிட்டான் என்றதும், அதே தாய் தான் பால் தந்த மார்பை அறுத்து எறிவேன் என வீரவாளுடன் போர்க் களம் செல்கிறாள். தன் மகன் வீரப்புண் பட்டு இறந்தமைக்கண்டு தான் ஈன்ற பொழுதைவிட பெரு மகிழ்சியடைவதாகக் காக்கைப்பாடினி நச்செள்ளையார் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

"மாண்டு அமர்க்கு உடைந்தனை ஆயின், உண்ட என்
முலை அறுத்திடுவேன் யான் எனச் சினை,
கொண்ட வாளொடு படுபிணம் பெயரா
செங்களம் துழவு வோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடைக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந் தனளே

( புறம் . 278:5-9)

பெண்கள் மழலைச் செல்வங்களை பெற்றதுடன் தன் மக்களை வீரம்மிக்கவர்களாகச் செயல்பட வைப்பதில் தமது கடமையை வெளிப்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது.

குழல், யாழின் இசையை விட இனிமையானது மழலைச் செல்வங்களின் மொழி. அவர்கள் இல்லற வாழ்வில் இனிமைக் கூட்டுதலுக்குரியவர்கள். மழலையின் மூலம், மகிழ்ச்சியே அதிகரிக்கும் என்பதனையும், அத்தகைய மழலைச் செல்வங்களைப் பெறவதே பெருமை என்றும், அவ்வாறு பெற்றெடுக்கப்பட்ட மழலைச் செல்வங்கள் எவ்வாறு இருக்க வேண்டும், அவர்களை செம்மைப் படுத்த வேண்டியவரின் கடமைகள் பற்றியும் இக்கட்டுரை வழி அறியமுடிந்தது.

Owned and published by Dr. S. Sathasivam from. No.17, Tagore Street,
MMDA Nagar, Chitlapakkam, Chennai - 600 064. and printed by R. Venkatesan at
Anbu Achakam, 22/12, South Mada Street, Chinna Kancheepuram - 631 501.
Editor - Dr.S.Sathasivam.

